**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, UTHUKULI**

| | | |
|---|---|---|
| Case number | : | **OS 09 of 2020** |
| Deposition of witness | : | **PW1** |
| Name | : | **முருகேசன்** |
| Father Name | : | **பழனிச்சாமி** |
| Age | : | **53** |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 23.02.2026

**<u>1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. எனது தந்தை வழி தாத்தா பெயர் மணியப்பநாடார். எனது தந்தை இறந்து விட்டார், தாயார் வீட்டில் படுத்த படுக்கையாக உள்ளார். எனது தாயார் நல்ல உடல் நிலையில் நடமாடிக் கொண்டுள்ளார் என்றால் சரியல்ல. அவிநாசியில் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் எனது தாயார் கொடுத்த புகாரின் அடிப்படையில் நிலுவையில் உள்ள வழக்கில் எனது தாயார்தான் முதல் சாட்சியாக சாட்சியம் அளித்துள்ளார் என்றால் சரிதான். அந்த வழக்கில் எனது தாயாரை விசாரித்த போது நான் உடன் இருந்தேனா என்றால் இல்லை. அந்த வழக்கில் எனது தாயாரை முழுமையாக குறுக்கு விசாரணை செய்யப்பட்டதைத் தெரிந்து கொண்டேனா என்றால் ஆமாம்.

2. அந்த வழக்கில் குறுக்கு விசாரணையின் போது எனது தாயார் இந்த வழக்கு சம்பந்தமாகவும் நிறைய ஒப்புதல் கொடுத்துள்ளார் என்பதை தெரிந்து கொண்டேனா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. இந்த நீதிமன்றத்தில் ஆணையர் மூலம் எனது தாயாரை விசாரணை செய்வதில் எனக்கு ஆட்சேபனை ஏதேனும் உள்ளதா என்றால், எனது தாயாருக்கு சர்க்கரை மற்றும் இதர உடல் உபாதைகள் காரணமாக நினைவு இழந்துள்ளார். அதனைக் காட்ட ஏதேனும் மருத்துவச் சான்றிதழ்

நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் செய்யப்பட்டுள்ளது. நான் அவ்வாறு எந்த ஒரு மருத்துவ சான்றும் தாக்கல் செய்யவில்லை என்றாலும், இந்த வழக்கிற்காக எனது தாயார் நினைவு இழந்துள்ளார் என்று பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

3. எனது தாயாருக்கு அடிக்கடி சுயநினைவு இழந்து போவதால், அவரை நீதிமன்றம் ஆணையர் மூலம் விசாரிக்க இயலாது. எனது தாயார் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் கொடுத்துள்ள ஒப்புதல்கள் இந்த வழக்கிற்கு விரோதமாக உள்ளதால், எனது தாயாரை விசாரித்தால் வழக்கு பாதகமாகிவிடும் என்பதால் அவர் அடிக்கடி சுயநினைவு இழந்து போகிறார் என்று பொய் உரைக்கிறேன் என்றால் சரியல்ல.

4. தற்போது என்னிடம் காட்டப்படும், கடந்த 03.12.2015 தேதியில் எனது தாயார் மேற்படி குற்ற வழக்கில் குறுக்கு விசாரணையின் போது, கொடுத்த சாட்சியத்தில் அவர் கிரையம் பெற்ற தேதி தனக்கு தெரியவில்லை என்றும், அந்த பூமியின் காலை எண் தனக்கு தெரியவில்லை என்றும், அந்த பூமி சம்பந்தமாக அதுநாள் வரையில் கந்தாயம் செலுத்தவில்லை என்றும், தான் கிரையம் பெற்ற தேதியிருந்து எதிரிகள்தான் பூமியை அனுபவித்து வருகிறார்கள் என்றும், கிரையம் பெற்ற தேதியிலிருந்து எனது தாயாரோ, எனது தந்தையோ அங்கு செல்லவில்லை என்றும், அந்த பூமியில் எந்த ஒரு விவசாயமும் செய்யவில்லை என்றும் கூறியுள்ளார் என்றால் அவ்வாறுதான் அதில் உள்ளது, ஆனால் நான் என் தாயாரை கேட்ட போது, அவர் அவ்வாறு கூறவில்லை என்று சொன்னார். தற்போது என்னிடம் காட்டப்படுவது மேற்படி குற்றவியல் வழக்கில் தாயார் கொடுத்த சாட்சியம் என்றால் சரிதான். **(மேற்படி குற்றவியல் வழக்கில் சாட்சி**

**மாரியம்மாள் கொடுத்த சாட்சிய வாக்குமூலம் இணையவழியில் தாக்கல் செய்யப்பட்டு பி.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

5. 1994 வருடத்தில் எனது தாயார் பெற்ற வா.சா.ஆ.1 கிரையத்தின் அடிப்படையில் தான் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் நான் சாட்சியாகவோ அல்லது பதிவாளர் அலுவலகத்திலோ கையொப்பம் எதுவும் செய்யவில்லை என்றால் சரிதான், ஆனால் உடன் இருந்தேன். அந்த சமயத்தில் எனது வயது 22. மேற்படி ஆவணத்தின் மூல ஆவணமான வா.சா.ஆ.2 ஆவணத்தில் எனது தாயாருக்கு கிரையம் கொடுத்த காளியப்பனுக்கு, முத்த மூப்பன் மக்கள் மாரிமுத்து தனக்காகவும், தனது மைனர் மக்கள் கண்ணுசாமி மற்றும் ரமேஷ்க்காகவும், மற்றொருவர் கே எம் முருகேசன் தனக்காகவும் தனது மைனர் மகன் மணிவண்ணனுக்காகவும், ராக்கியப்பநாடார் மக்கள் பழனிச்சாமி தனக்காகவும், தனது மைனர் மகன் செந்தில்குமாருக்காகவும், மணியன் என்பவர் தனக்காகவும் தனது மைனர் மக்கள் ஜெகநாதன் மற்றும் துரைசாமி ஆகியோர்களுக்காகவும் கிரைய பத்திரம் எழுதிக் கொடுத்துள்ளார் என்றால் சரிதான்.

6. எனது தாயார் கிரையம் பெற்ற கிரைய ஆவணத்தில் செக்கு பந்தி கண்டுதான் 36 சென்ட் கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். ஆனால் எனது தாயாருக்கு மேற்படி பூமியை விற்ற காளியப்பனின் ஆவணத்தில் பொதுவில் 36 சென்ட் கிரையம் பெற்றதாக வாசகம் உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.6 ஆவணமாக 1974-2005, 2011 வரையிலான அடங்கல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி அடங்கல் அடிப்படையில் முத்தா மூப்பன் அவர்கள் சொந்த சாகுபடி செய்ததாகத்தான் பதிவுகள் உள்ளது என்றால் சரிதான். மேற்படி

அடங்கலில் எனது தாயாரின் பெயர் எந்த ஒரு இடத்திலும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எனது தாயார் கிரையம் பெற்ற பின்பு அந்த பூமியில் சாகுபடி செய்யாத காரணத்தினால் தான், அவரது பெயர் அடங்கலில் வரவில்லை என்று சொன்னால் சரியல்ல.

7. இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாகவோ அல்லது பின்பாகவோ, நாங்கள் மேற்படி தாவா பூமியில் விவசாயம் செய்தோம் என்று காட்ட எந்த ஒரு ஆவணத்தையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் தாக்கல் செய்யவில்லை. வா.சா.ஆ.10 ஆவணத்தில் எனது தாயார் எமோஷனல் இல்னஸ் காரணமாக பாதிக்கப்பட்டதாக கண்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.11 ஆக பிரதிவாதிகள் கிரையம் பெற்ற ஆவணத்தின் நகலை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் மூலம் தாவா சொத்து பார்வையிடப்பட்டு புகைப்படங்கள் மற்றும் வரைபடத்துடன் அறிக்கை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. மேற்படி அறிக்கையின் எட்டாவது பத்தியில் மனுதாரர்ரான ஒன்றாம் பிரதிவாதி தாவா சொத்தினை மைய காங்கிரட் பாதையிலிருந்து தென்மேற்கு பகுதியை அடையாளம் காட்டினார் என்றும், எதிர்மனுதாரர் ஆகிய நான் மைய காங்கிரட் பாதையில் இருந்து வடமேற்கு பகுதியை அடையாளம் காட்டினேன் என்றும் கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

8. மேற்படி பூமியை அடையாளம் காணுவதில் ஏற்பட்ட குழப்பங்கள் காரணமாக கிராம நிர்வாக அலுவலர் மற்றும் அளவையரைக் கொண்டு, பூமியை அடையாளம் காண வேண்டும் என்று மனு தாக்கல் செய்யப்பட்டு, இந்த நீதிமன்றத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதனை

எதிர்த்துதான் நாங்கள் மாண்புமிகு உயர் நீதிமன்றத்தை நாடியுள்ளோம் என்றால் சரிதான். தற்போது என்னிடம் காண்பிக்கப்படுவது மேற்படி எங்களது மேல்முறையீட்டில், பிரதிவாதிகளுக்கு கொடுக்கப்பட்ட நோட்டீஸ் மற்றும் இடைக்கால தடை உத்தரவு என்றால் சரிதான். **(மேற்படி நோட்டீஸ் மற்றும் தடை உத்தரவின் நகல் இணையவழியில் தாக்கல் செய்யப்பட்டு பி.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

9. எனது தாயார் கொடுத்த புகாரின் பேரில் அவிநாசி குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் இருந்த வழக்கில் முழு விசாரணையின் பின்பு எதிரிகள் குற்றவாளிகள் அல்ல என்று விடுவிக்கப்பட்டார்களா என்றால் காவல்துறை சரியாக விசாரணை செய்யாத காரணத்தினால் விடுவிக்கப்பட்டார்கள். அதன் பெயரில் மேல்முறையீடு செய்யப்படவில்லை என்றால் சரிதான். எனது தாயார் கிரையம் பெற்ற ஆவணத்தில் செக்கு பந்தி கண்டு கிரையம் பெற்ற காரணத்தினால், நான் பாகப்பிரிவினை பரிகாரம் கோர இயலாது என்று சொன்னால் சரியல்ல.

10. எனது தாயார் கிரையம் பெற்ற இரண்டு ஆவணங்களிலும் சொத்தின் அளவு உண்மைக்கு மிகுதியாக காட்டப்பட்டுள்ளதால் நாங்கள் விளம்புகை பரிகாரமும் கோர இயலாது என்று சொன்னால் சரியல்ல. எனது தாயாருக்கு கிரையம் கொடுத்த நபர்கள் தான் பூமியை அனுபவித்து வந்தார்கள் என்றாலும், எனது தாயார் கிரையம் பெற்ற பின்பு நாங்கள் அந்த பூமிக்கு செல்லவே இல்லை என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதிகளுக்கு கிரையம் கொடுத்தவர்களுக்கும், அவர்களுக்கு பின் பிரதிவாதிகளுக்கு மட்டுமே பூமியில் அனுபவம் இருந்து வருகிறது என்றாலும், எங்களது அனுபவத்தில் பூமி எந்த ஒரு நாளிலும் இருந்ததில்லை என்று சொன்னால் சரியல்ல.

11. பிரதிவாதிகள் கிரையம் பெற்ற சொத்தும், இந்த தாவா சொத்தும் ஒரே இனமாக பிரதிவாதிகள் அமைத்துள்ள காம்பவுண்டினுள் உள்ளது என்றால் சரிதான். பிரதிவாதிகள் கொடுத்த மனுவின் பெயரில் நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த அறிக்கைக்கு, எங்களது தரப்பில் ஆட்சேபனை எதுவும் தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல தெரிவித்தோம். நீதிமன்ற ஆணையர் பார்வையிட்ட சமயத்தில் தாவா சொத்து விவசாயம் எதுவும் செய்யப்படாமல் தரிசு பூமியாக இருந்தது என்றால் சரியல்ல. அதன் காரணமாக நாங்கள் Mesne Profits கேட்டுள்ளது சட்டப்படி நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. எனது தாயாருக்கு தெரிந்து பிரதிவாதிகளும் அவருக்கே விற்பனை செய்தவர்களும் இதுநாள் வரையில் தாவா சொத்தினை அனுபவித்து வரும் காரணத்தினால் பிரதிவாதிகளுக்கு எதிரிடை அனுபவம் உரிமை கிடைத்துள்ளது என்றால் சரியல்ல.

12. தாவாவில் மற்றும் சொத்து விவரத்தில் 36 சென்ட விஸ்தீரனம் காட்டியுள்ளோம் என்றாலும், ஆனால் உண்மையில் 27 சென்ட் தான் உரிமையுடையது என்று சொன்னால் சரிதான் . இந்த வழக்கில் விளம்புகை மற்றும் சுவாதீன பரிகாரமும், பாகப்பிரிவினை மற்றும் சுவாதீன பரிகாரமும் கோரியுள்ளது சட்டப்படி கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. தனி சுவாதீனம் அல்லது பொது சுவாதீனம் கேட்டு இந்த வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

13. எனது தாயாருக்கு விற்பனை செய்த காளியப்பன் எவ்வாறு பொதுவில் கிரையம் பெற்று செக்கு பந்தி கண்டு தாவா சொத்தினை எனது தாயாருக்கு விற்றார் என்று என்னால் எந்த ஒரு விளக்கமும் சொல்ல இயலாது என்றால் அவரது அனுபவத்தில் உள்ள இடத்தை பொருத்தவரையில் செக்கு பந்தி கண்டு கிரையம் கொடுத்தார். எனது

தாயார் கிரையம் பெற்ற ஆவணத்தில் உள்ள செக்கு பந்தியும், இந்த தாவா செக்கு பந்தியும், முற்றிலும் மாறுபட்டுள்ளது என்று சொன்னால் தற்போது நில அமைப்புகள் மாறுபட்டு உள்ளது. எங்கள் தாவாவில் சொல்லி உள்ளது போல் பிரதிவாதிகள் எங்களை டிசம்பர் 2012 இல் தான் தாவா சொத்தில் இருந்து வெளியேற்றினார்கள் என்று கூறுவது பொய் என்றால் 2011 டிசம்பர் கடைசி வாரத்தில் எங்களை வெளியேற்றினார்கள். நான் கூறும் தேதிக்கு முன்பும் எனது தாயார் மேற்படி தாவா சொத்தில் சுவாதீனத்தில் இருந்தார் என்று காட்ட எந்த ஒரு ஆதாரமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

14. இந்த வழக்கிற்கு ஒரு மூலத்தை ஏற்படுத்துவதற்காகதான் குற்றவியல் வழக்கு தொடுக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதிகளிடமிருந்து ஆதாயம் பெறுவதற்காக தான் இந்த தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. டிசம்பர் 2011 இல் எங்களை தாவா சொத்தில் இருந்து பிரதிவாதிகள் வெளியேற்றியதாக நான் கூறும் நிலையில் அது சம்பந்தமாக காவல் நிலையத்தில் புகார் ஏதேனும் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை, இரண்டு மாதங்கள் கழித்து சென்று கொடுத்தோம். 09.04.2012 தேதியில் தான் புகார் கொடுத்தேன் என்று சொன்னால் சரிதான்.

**(இரண்டாம் பிரதிவாதி தரப்பில் மேற்படி குறுக்கு விசாரணை ஏற்றுக் கொள்ளப்பட்டது)**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியிடம் கையெழுத்து பெறப்பட்டது.

B DHARANEETHER Digitally signed by B DHARANEETHER Date: 2026.02.23 19:19:35 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும் நீதித்துறை நடுவர்,**

**ஊத்துக்குளி.**